DECEMBER 2023 **P/ID 35311/PTL1A**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே
50 சொற்களில் விடை எழுதுக.

1. பாஞ்சாலி சபதம் – குறிப்பு வரைக.

2. சகுனியின் சதி குறித்து எழுதுக.

3. அர்ச்சுனன் செய்த சபதம் என்ன?

4. கதிரைவேல் மன்னன் எவ்வாறு இறந்தான்?

5. திருடர் தலைவனின் தன் வரலாறு குறித்து எழுதுக.

6. அன்னத்தை அறிமுகப்படுத்துக.

7. முன்பிறந்த குறட்பாக்கள் ஏன் முந்திப் போட்டி போட்டன?

8. ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.

9. எட்டாவது சீர்கள் உண்ணாவிரதம் இருக்கக் காரணம் என்ன?

10. இராமானுஜரின் பெற்றோர் யாவர்?

11. இராமானுஜரின் கல்வி குறித்து எழுதுக.

12. இராமானுஜரின் சீர்திருத்த நடவடிக்கையினைக் குறிப்படுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. பாஞ்சாலி துகிலுரியப்பட்ட நிகழ்வை எடுத்துரைக்க.

14. துச்சாதனனின் துர்குணத்தை விளம்புக.

15. நரிக்கண்ணனுக்கும் – வேழ மன்னனுக்கும் இடையே நடந்த உரையாடல் குறித்து எழுதுக.

16. நீலன் – நீலி பாத்திரப்படைப்பின் சிறப்பியல்பினை எடுத்தியம்புக.

17. தமிழன்பனின் கவித்திறனை மதிப்பிடுக.

18. திருவரங்கத்தில் இராமானுஜர் ஆற்றிய தொண்டினை எழுதுக.

19. இராமானுஜரின் மனிதநேய மாண்பினை வெளிப்படுத்துக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. சபதச் சருக்கத்தினை விவரிக்க.

21. பாண்டியன் பரிசு குறித்துக் கட்டுரை வரைக.

22. வேலன் கதாப்பாத்திரத்தைத் திறனாய்க.

23. வள்ளுவரின் சிறப்புகளை தமிழன்பன் வழி நின்று விவரி.

24. இராமானுஜர் எதிர்கொண்ட இன்னல்களைக் கட்டுரைக்க.

———————